# 2027–இல் உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா உருவெடுக்கும்

**சென்னை, ஜூன் 15:** வரும் 2027-ஆம் ஆண்டில் உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா உருவெடுக்கும் என மத்திய அரசின் தலைமைப் பொருளாதார ஆலோசகர் வி.அனந்த் நாகேஸ்வரன் தெரிவித்தார்.

இந்திய தொழில் வர்த்தக சபைகளின் சம்மேளனம் (ஃபிக்கி) சார்பில் 'சுதந்திர நூற்றாண்டில் இந்திய பொருளாதாரம், அமிர்த காலத்துக்கான பயணம்' எனும் தலைப்பில் கலந்துரையாடல் நிகழ்ச்சி சென்னையில் வியாழக்கிழமை நடைபெற்றது.

இதில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற தலைமைப் பொருளாதார ஆலோசகர் அனந்த் நாகேஸ்வரன் பேசியதாவது: 2023–2024 நிதியாண்டில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 7.2 சதவீதமாக உள்ளது. 2018–19–இல் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி 6.5 சதவீதமாக இருந்தது. கரோனா பெருந்தொற்றின்போது பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தபோதிலும் தற்போது 7.2 சதவீத வளர்ச்சியுடன் மீண்டுள்ளது.

2014–இல் உலகளவில் 10–ஆவது இடத்தில் இருந்த இந்திய பொருளாதாரம் தற்பொழுது 5–ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது. வரும் 2027–இல் இந்தியா மூன்றாவது இடத்துக்கு முன்னேறும்.

உலகின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு 2010 முதல் 2019–ஆம் ஆண்டு வரை இந்தியாவின் பங்களிப்பு 5 சதவீதமாக இருந்தது. ஆனால், 2021 முதல் 2028–ஆம் ஆண்டு வரை இந்தியாவின் பங்களிப்பு 6 சதவீதமாக உயரும் வாய்ப்புள்ளது.

2022–2023 –நிதி ஆண்டில் ஜனவரி முதல் மார்ச் வரையிலான காலாண்டில் இந்திய பொருளாதார வளர்ச்சி 6.1 சதவீதமாக இருந்தது. அப்போது சீனா 4.5%, அமெரிக்கா 1.6% என இந்தியாவைவிட குறைந்த வளர்ச்சி பெற்றிருந்தன.

வேளாண் பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை உயர்த்தியது, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்துக்கான ஊதிய உயர்வு போன்ற மத்திய அரசின் நடவடிக்கைகளால் கிராமப்புறங்களில் நிதி பாதுகாப்பு உறுதிசெய்யப்பட்டுள்ளது. நகர்ப்புறங்களைப் பொருத்தவரை வாகனங்கள் விற்பனை, கடன் மற்றும் பற்று அட்டைகளின் (கிரெடிட், டெபிட் அட்டைகள்) பயன்பாடு அதிகரித்துள்ளது.

2023 ஏப்ரலில் பண வீக்கம் 4.3 சதவீதமாக குறைந்துள்ளது. தனியார் துறையின் முதலீடு கடந்த நிதியாண்டில் 21.4 சதவீதம் உயர்ந்துள்ளது.

இதுபோன்ற நடவடிக்கைகள் மற்றும் அறிகுறிகளால் அடுத்த மூன்றாண்டுகளில் உலகில் 3–ஆவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா உயரும் என்றார் அவர்.

நிகழ்ச்சியில், மத்திய நிதி அமைச்சக கூடுதல் செயலர் கமலேஷ் வர்ஷினி, ஃபிக்கியின் தமிழ்நாடு மாநிலக் கவுன்சில் தலைவர் ஜி.எஸ்.கே.வேலு, இணைத் தலைவர் பூபேஷ் நாகராஜன் உள்ளிட்டபலர் கலந்துகொண்டனர்.

**தலைமைப் பொருளாதார ஆலோசகர்**




சென்னையில் இந்திய தொழில் வர்த்தக சபைகளின் சம்மேளனம் (ஃபிக்கி) சார்பில் வியாழக்கிழமை நடைபெற்ற கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பேசிய மத்திய அரசின் தலைமைப் பொருளாதார ஆலோசகர் வி.அனந்த் நாகேஸ்வரன். உடன், (இடமிருந்து) ஃபிக்கி–இன் தமிழ்நாடு மாநில கவுன்சில் தலைவர் ஜி.எஸ்.கே.வேலு, நிதி அமைச்சகக் கூடுதல் செயலர் கமலேஷ் வர்ஷினி, ஃபிக்கி தமிழ்நாடு மாநிலக் கவுன்சில் இணைத் தலைவர் பூபேஷ் நாகராஜன்.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# மக்கள் பங்கேற்பு தேவை

முனைவர் என். மாதவன்

அண்மைக்காலமாக மக்கள்தொகை தொடர்ந்து அதிகரித்துக்கொண்டே வருகிறது (உலக நாடுகளில் மக்கள்தொகையில் முதல் இடத்தில் இருக்கும் நாடு இந்தியா). மக்கள்தொகை பெருக்கத்திற்கேற்ப பொதுப்போக்குவரத்தின் தேவையும் அதிகரித்துள்ளது. அதிகரிக்கும் தேவையை பொதுபோக்குவரத்து ஈடுசெய்ய இயலாத நிலையில் தனிநபர்கள் இருசக்கர வாகனம், நான்குசக்கர வாகனங்களில் பயணிக்கின்றனர்.

மக்களுக்குத் தேவையான மின்சாரத் தயாரிப்பில் பல்வேறு வகைகளில் சக்தி செலவினங்கள் உள்ளன. சக்தி செலவாகும் அனைத்து இடங்களிலும் மாசு கலந்த வாயுக்களின் வெளியேற்றம் நிகழ்கிறது. இதனால் காற்றில் பசுமை இல்ல வாயுக்களின் அளவும் அதிகமாகி வருகிறது. இதனால் புவி வெப்பமயமாதல் நிகழ்கிறது. வளிமண்டல வெப்பநிலை எப்போதுமே அதிகமாக இருந்தாலும், கோடை காலத்தில் இதனை நம்மால் கூடுதலாக உணர முடிகிறது.

அரசின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான கொள்கைகளில் மாற்றம் ஏற்பட வேண்டியதும் அதனை நடைமுறைப்படுத்துவதில் உறுதிப்பாடும் தேவை. மேம்படும் சுற்றுச்சூழல் சார்ந்த அரசின் கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்படுவதை கண்காணிப்பதற்கான அமைப்புகளும் அவசியம்.

மோட்டார் வாகனங்கள், மகிழுந்துகள் போன்றவை தயாரிக்கப்படும்போதே அவற்றிற்கான ஆயுட்காலமும் நிர்ணயிக்கப்படுகிறது. அந்த குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர் அந்த வாகனங்கள் வேண்டாத குப்பையாகவே பார்க்கப்படுகிறது. இப்படிப்பட்ட வாகனங்களின் பாகங்களை தனித்தனியாகப் பிரித்து வாய்ப்புள்ளவற்றை தொடர்ந்து பயன்படுத்த வழிவகை செய்யப்பட வேண்டும். பயன்படுத்த இயலாத நெகிழி, இரும்பு பாகங்களை மறுசுழற்சிக்கு உட்படுத்தலாம்.

இவ்வாறு செய்யும்போது சிறுசிறு பாகங்களாகன போல்ட், நட் போன்றவற்றை புதிதாக உருவாக்கத் தேவைப்படும் சக்தி செலவினத்தைக் குறைக்கலாம். ஜப்பானில் இது பல்லாண்டுகாலமாகவே நடைமுறையில் உள்ளது. இப்படி ஒவ்வொரு பயன்பாட்டையும் உற்றுநோக்கி மாற்றங்களை உருவாக்க வேண்டும்.

போக்குவரத்தைப் பொறுத்தவரை நகர்ப்புறங்களில் வாரநாட்களில் வாகனத்தில் தனிநபராக பயணிப்பதில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும். பெருநகரங்களில் குறிப்பிட்ட தூரம் வரை மட்டுமே தனியார் வாகனங்கள் அனுமதிக்கப்பட வேண்டும். பின்னர் பொதுப்போக்குவரத்தின் மூலம்தான் நகரின் பகுதிகளுக்குச் செல்லும் நிலையை உருவாக்க வேண்டும். இதற்கு பொதுபோக்குவரத்து வசதியை அதிகரிக்க வேண்டும்.

பொதுப்போக்குவரத்து மேம்படுத்த அவகாசம் தேவைப்படும் இடங்களில் ஷேர் ஆட்டோ இயக்குவோர்களையே பயன்படுத்தலாம். நகர்ப்புறங்களில் சுற்றுச்சூழலை மாசுபடுத்தாத மிதிவண்டி பயன்பாட்டை ஊக்குவிக்க வேண்டும். அதற்கென தனியாக பாதைகள் அமைத்துத் தரப்பட வேண்டும்.

ஜெர்மனியில் நடைமுறையில் உள்ளது போல ரயிலில் மிதிவண்டியையும் உடன் எடுத்துச் செல்ல அனுமதிக்கலாம். தெருவில் பொதுக்கூட்டங்கள் நடத்துவதைத் தவிர்த்து இயன்றவரை இணையவழி கூட்டங்களை ஊக்குவிக்கலாம். பெருந்தொற்று காலத்தில் இருந்ததுபோல அலுவலக செயல்பாடுகளை தனிநபர்கள் வீட்டிலிருந்தபடியே மேற்கொள்ளும் நடைமுறைகளைத் தொடரலாம். இவ்வளவும் சாத்தியமா என்று தோன்றலாம். அரசு மனது வைத்தால் நிச்சயம் சாத்தியமே.

சுற்றுச்சூழல் தொடர்பான விவாதங்களில் அரசை குறை சொல்லும் போக்கு அதிகம் காணப்படுகிறது.

சுற்றுச்சூழல் மேம்பாட்டில் தனிநபர்களின் பங்களிப்பைப் பற்றியும் விவாதிப்பது அவசியம். தனிநபர்களின் செயல்பாடுகளில் ஆரோக்கியமான மாற்றங்கள் ஏற்படாதவரை சுற்றுச்சூழல் மேம்பாடு சாத்தியமாகாது.

தனிநபராக ஒவ்வொருவரும் வசதி வளங்களை துய்க்கும் போக்கு இருந்து வருகிறது. இவ்வாறான துய்த்தலுக்கேற்ப மின்சாரம், எரிபொருட்களின் தேவையும் அதிகமாகி வருகிறது. அதிக அளவிலான எரிபொருட்கள் பயன்பாட்டினால் ஏற்படும் புவி வெப்பமயமாதலை தவிர்க்க முயல வேண்டும். முதலில் வசதி உள்ளோர் தம்மிலிருந்து மாற்றத்தைத் தொடங்க வேண்டியது அவசியம்.

நமக்கு கிடைக்கும் சேவைகள் அனைத்துக்கும் கட்டணம் செலுத்தும் அளவுக்கு செல்வந்தர்கள் எப்போதுமே இருப்பர். அடுத்தபடியாக உயர் நடுத்தர, நடுத்தர வர்க்கத்தினருக்கும் உறுதி செய்யப்பட்ட வருமானம் உள்ளது. இந்த மூன்று தரப்பினருக்கும்தான், நமக்குக் கிடைக்கும் வசதிகளின் பின் உள்ள சக்தி செலவினங்களைப் புரிந்து செயல்பட வேண்டும்.

எதனையும் விலைகொடுத்து வாங்கிவிட இயலும் என்பது இன்றைய எதார்த்தமாக இருந்தாலும் காலம் மாற மாற நம்மிடமுள்ள வாங்கும் சக்தியைவிட அதிகமானதாக இன்றியமையாத பொருட்களின் விலையிலும் ஏற்றம் ஏற்படும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். பெருந்தொற்றுக் காலத்தில் உரிய விலை செலுத்த முன்வந்தாலும் ஆக்சிஜன் உருளைகளுக்கு பற்றாக்குறை நிலவியதை மறத்தல் கூடாது.

எனவே சேவைகளின் பயன்பாட்டில் ஓரளவுக்காவது சிக்கனத்தை வசதியுள்ளோர் கொண்டுவர முனைய வேண்டும். இன்றைய நிலையில் இது பற்றிய விழிப்புணர்வை உருவாக்குவது இவர்களுக்கே சாத்தியமான ஒன்று.

இவ்வாறான பகிர்வு ஏழை நடுத்தர வர்க்கத்தினரை இதிலிருந்து தவிர்ப்பதாக தற்போது அமைந்தாலும் விரைவில் அவர்களும் இந்த சமூக ஏற்பாட்டிற்குள் கொண்டுவரப்பட வேண்டும். இந்த நடைமுறைகள் பசுமை இல்ல வாயுக்களை அதிகமாக வெளியிடும் செல்வந்த நாடுகளுக்கும் பொருந்தும்.

சுற்றுச்சூழல் செயல்பாடுகளைப் பொறுத்தவரை உலக அளவில் சிந்தித்து உள்ளூர் அளவில் செயல்படுவோம் என்பதே பல ஆண்டுகளாக சொல்லப்பட்டுவரும் வழிமுறையாகும். என்னதான் அரசின் கொள்கைகளின் ஆரோக்கியமான மாற்றங்கள் வந்தாலும், அவற்றை ஏற்று செயல்படுத்துவதற்கு பலர் முன்வராமல் போனால், எந்த மாற்றமும் நீண்ட காலம் நிலைத்திருக்காது. இதனைக் கணக்கில் கொண்டு வளர்சிக்கான பாதையை நோக்கி நாம் பயணிப்போம்.

EVA STALIN IAS

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# கிண்டி மருத்துவமனை திறப்புக்கு குடியரசுத் தலைவர் வருகை தடுக்கப்பட்டது

## முதல்வர் மு.க.ஸ்டாலின் குற்றச்சாட்டு

சென்னை, ஜூன் 15: சென்னை கிண்டி 'கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை' திறப்பு விழாவுக்கு குடியரசுத் தலைவர் வருவதை சிலர் தடுத்துவிட்டனர் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் குற்றஞ்சாட்டினார்.

சென்னை, கிண்டி கிங் ஆய்வக வளாகத்தில் ரூ.240 கோடி செலவில் 1,000 படுக்கைகளுடன் கட்டப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையை பொது மக்கள் பயன்பாட்டுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வியாழக்கிழமை திறந்து வைத்தார்.

மருத்துவமனை செவிலியர்கள், பணியாளர்களை கௌரவிக்கும் வகையில் அவர்களது கைகளாலேயே அந்த மருத்துவமனையை அவர் திறக்கச்செய்தார்.

இதைத் தொடர்ந்து தொடக்க விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

ஒரு மனிதனின் வாழ்க்கையை அவரது மரணத்துக்குப் பிறகு கணக்கிட வேண்டும் என முன்னாள் முதல்வர் கருணாநிதி கூறினார். அவரது கூற்றுப்படியே கருணாநிதி மறைந்த பிறகும் சமூகத்துக்கு பயன்பட்டு வருகிறார்.

கடந்த 2015-இல் அடிக்கல் நாட்டிவிட்டு இன்று வரை இரண்டாவது செங்கல்லைக் கூட எடுத்து வைக்காத எய்ம்ஸ் மருத்துவமனை கட்டடத்துக்கு நடுவே, வெறும் 15 மாதங்களில் இந்த மருத்துவமனை கட்டப்பட்டு பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

ஆண்டுக்கு ஒரு மருத்துவமனையை இவ்வாறு நம்மால் கட்ட முடியும். அந்த அளவுக்கு நாட்டிலேயே முன்மாதிரியான மருத்துவக் கட்டமைப்பு இங்கு உள்ளது. இந்தியாவிலேயே 36 அரசு மருத்துவக் கல்லூரிகளுடன் 5,050 அரசு எம்பிபிஎஸ் இடங்களை கொண்ட முதன்மை மாநிலமாக தமிழகம் விளங்கி வருகிறது.





சென்னை கிண்டி கிங் இன்ஸ்டிடியூட் வளாகத்தில் கட்டப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையை மருத்துவ ஊழியர்களுடன் இணைந்து வியாழக்கிழமை திறந்து வைத்த முதல்வர் மு.க.ஸ்டாலின்.

### வேலூரில் கலைஞர் தங்கும் விடுதி

மருத்துவ சிகிச்சைக்காக வேலூர் வருவோர் குறைந்த கட்டணத்தில் தங்குவதற்காக அரசு சார்பில் கலைஞர் நூற்றாண்டு தங்கும் விடுதி கட்டப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:

வேலூர் மாவட்டத்தில் சிஎம்சி போன்ற பல்வேறு பெரிய மருத்துவமனைகள் இயங்கி வருகின்றன. அங்குள்ள மருத்துவமனைகளில் சிகிச்சை பெற தமிழகம் மட்டுமன்றி இந்தியா முழுவதிலும் இருந்து மக்கள் வருகிறார்கள்.

அவர்களில் பொருளாதார ரீதியாக வசதியில்லாத பலரும் சிகிச்சைக்காக வருவதாலும் அவர்களுடன் வருபவர்கள் வேலூரில் தங்குவதற்கு, குறைந்த கட்டணத்தில் அறைகள் வாடகைக்கு கிடைப்பதில்லை என்பது அரசின் கவனத்துக்கு பலமுறை கொண்டுவரப்பட்டது.

இதையடுத்து, வேலூர் அருகே சத்துவாச்சாரி உள்வட்டத்தில் உள்ள பெருமுகை என்ற கிராமத்தில் 2 ஹெக்டேர் நிலம் தேர்வு செய்யப்பட்டு அதில் 250 படுக்கை வசதி கொண்ட கலைஞர் நூற்றாண்டு தங்கும் விடுதி கட்டப்படும் என்றார் அவர்.

மக்களுக்கு உண்மையான சேவை நோக்கத்துடன் திட்டங்களைத் தீட்டுபவர்களுக்கும், மக்களை ஏமாற்றுவதற்காக திட்டங்களை அறிவிப்பவர்களுக்குமான வேறுபாட்டை தமிழக மக்கள் நன்கு அறிவார்கள். கருணாநிதி தனது வாழ்க்கை வரலாற்றை 'நெஞ்சுக்கு நீதி' என்ற பெயரில் எழுதினார். அதன் முதல் பாகத்தின் வெளியீட்டு விழா கடந்த 1975-ஆம் ஆண்டு ஜனவரி 12-ஆம் தேதி கலைவாணர் அரங்கில் நடப்பதாக ஏற்பாடு செய்யப்பட்டது.

நூலை வெளியிட அன்றைய குடியரசுத் தலைவர் பக்ருதீன் அலி அகமது ஒப்புக்கொண்டிருந்தார். நூலைப் பெற்றுக்கொள்ள அன்றைய தமிழக ஆளுநர் கே.கே.ஷா வருவதாக தெரிவித்திருந்தார். கடைசி நேரத்தில், இப்போது நடந்திருப்பதைப் போன்றே, அப்போதும் குடியரசுத் தலைவரை வரவிடாமல் சிலர் தடுத்துவிட்டார்கள். அதைப் பற்றி எல்லாம் கருணாநிதி கவலைப்படவில்லை. நெஞ்சுக்கு நீதி நூலை மாற்றுத்திறனாளிகள் மூலம் வெளியிட்டார். கருணாநிதி வழியில் நாங்களும் சோதனைகளை சாதனைகளாக மாற்றுவோம்.

தமிழகத்துக்கும், தமிழ் மக்களுக்கும் நன்மைகள் செய்ய நினைக்கும்போதெல்லாம் அதற்கு ஒரு இடையூறை ஏற்படுத்தி நம் கவனத்தை திசை திருப்பி நன்மைகளைத் தடுக்கப் பார்ப்பார்கள். அதில் கவனத்தை செலுத்த மாட்டோம். மக்கள் நலன் ஒன்றே நமது இலக்கு என்ற நேர்வழியில் பயணிப்போம் என்றார் அவர்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் துரைமுருகன், எ.வ.வேலு, பி.கே.சேகர்பாபு, மா.சுப்பிரமணியன், உதயநிதி ஸ்டாலின், முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம், நாடாளுமன்ற உறுப்பினர் திருமாவளவன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# ஐஎஃப்ஏடி தலைவருடன் மத்திய நிதியமைச்சர் சந்திப்பு

புது தில்லி, ஜூன் 15: வேளாண் மேம்பாட்டுக்கான சர்வதேச நிதியத்தின் (ஐஎஃப்ஏடி) தலைவர் ஆல்வரோ லாரியோவுடன் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் வியாழக்கிழமை ஆலோசனை நடத்தினார்.

புது தில்லியில் நடைபெற்ற இந்த சந்திப்பின்போது, 'உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் உணவு சேமிப்பு, பதப்படுத்துதல் மற்றும் சிறிய அளவிலான வேளாண் லாபத்தை உருவாக்கும் நடவடிக்கைகளில் ஐஎஃப்ஏடி திறம்பட பங்களிப்பை ஆற்றவேண்டும் என்று லாரியோவிடம் மத்திய நிதியமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், உணவுப் பாதுகாப்பு, கடன் நெருக்கடி, பருவநிலை மாற்றம் உள்ளிட்ட புதிய சர்வதேச சவால்களை திறம்பட எதிர்கொள்வதில் வளர்ந்த மற்றும் வளர்ந்து வரும் நாடுகள் பங்கேற்பதை ஐஎஃப்ஏடி உறுதிப்படுத்துவதோடு, இதுபோன்ற புதிய வளர்ந்து வரும் சவால்களை நாடுகள் எதிர்கொள்ள உதவும் வகையில் புதிய நியாயமான மறுஆய்வை பலதரப்பு வளர்ச்சி வங்கிகள் மேற்கொள்வது அவசியம் என்றும் மத்திய நிதியமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.



மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனை புது தில்லியில் வியாழக்கிழமை சந்தித்துப் பேசிய வேளாண் மேம்பாட்டுக்கான சர்வதேச நிதியத்தின் (ஐஎஃப்ஏடி) தலைவர் ஆல்வரோ லாரியோ.

இந்த சந்திப்பு குறித்து மத்திய நிதியமைச்சகம் தனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், 'மத்திய நிதியமைச்சருடனான சந்திப்பின்போது ஜி20 நாடுகள் அமைப்புக்கான இந்தியாவின் தலைமையை ஆல்வரோ லாரியோ பாராட்டினார்.

அதுபோல பருவநிலை மாற்ற சவால்களை எதிர்கொள்வதற்கு ஐஎஃப்ஏடி முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று நிர்மலா சீதாராமன் வலியுறுத்தினார்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ரோம் நகரை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் ஐ.நா.வின் உணவு மற்றும் வேளாண் முனையமாக செயல்படும் ஐஎஃப்ஏடி, ஓர் சர்வதேச நிதி நிறுவனமாகும்.

1978-ஆம் ஆண்டு முதல் பல்வேறு நாடுகளுக்கு ரூ. 1.9 லட்சம் கோடி மானியங்கள் மற்றும் குறைந்த வட்டியிலான கடன்களை ஐஎஃப்ஏடி வழங்கியுள்ளது.



## அமெரிக்காவிடமிருந்து 30 அதிநவீன ஆளில்லா தாக்குதல் விமானங்களை வாங்குகிறது இந்தியா

**புது தில்லி, ஜூன் 15:** அமெரிக்காவின் 30 அதிநவீன 'எம்க்யூ-9பி பிரிடேட்டர்' ஆளில்லா தாக்குதல் விமானங்களை (ட்ரோன்) வாங்க பாதுகாப்பு கொள்முதல் கவுன்சில் அனுமதி அளித்துள்ளது.

அமெரிக்காவுக்கு அடுத்த வாரம் பிரதமர் மோடி செல்லும் போது இந்த ட்ரோன்கள் உள்பட பாதுகாப்பு தளவாடங்கள் 3 பில்லியன் அமெரிக்க டாலர் செலவில் வாங்குவதற்கான ஒப்பந்தம் அந்நாட்டு அதிபர் ஜோ பைடனுடன் கையொப்பமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நவீன பாதுகாப்பு தளவாடங்கள் சீன எல்லையில் உள்ள இந்திய ராணுவத்தின் கண்காணிப்பு திறனை மேலும் அதிகரிக்கும் என்று கூறப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையில் நடைபெற்ற பாதுகாப்பு கொள்முதல் கவுன்சிலில் எம்க்யூ-9பி பிரிடேட்டர் ட்ரோன்களை வாங்க அனுமதி அளித்தது.

வாங்கப்படவுள்ள முப்பது ட்ரோன்களில், கடற்படைக்கு 14 ட்ரோன்களும், விமானப்படை, ராணுவத்துக்கு தலா 8 ட்ரோன்களும் வழங்கப்படும் என்றும் 35 மணி நேரத்துக்கும் மேல் தொடர்ந்து பறக்கக் கூடிய இந்த ட்ரோன்களில் 450 கிலோ வெடிபொருள்களை அனுப்பலாம் என்றும் கூறப்படுகிறது.

கடலோர கண்காணிப்பு, நீர்மூழ்கி கப்பலைத் தாக்கும் திறன் கொண்டவையாகவும், வான் பாதுகாப்பு திறன் கொண்டவையாகவும் இந்த ட்ரோன்கள் இருவகைகளில் உள்ளன.

இந்திய பெருங்கடலின் கண்காணிப்புக்காக கடந்த 2020 முதல் 2 எம்க்யூ-9பி ரக ட்ரோன்களை இந்திய கடற்படை வாடகைக்கு எடுத்து பயன்படுத்தி வருகிறது. இந்திய பெருங்கடலில் சீன ஆதிக்கத்தைக் கண்காணிக்க இந்த 2 ட்ரோன்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

EVA STALIN ACADEMY

# குஜராத்தில் கரையைக் கடந்தது பிபர்ஜாய் புயல்

அகமதாபாத்/புது தில்லி, ஜூன் 15: குஜராத்தின் கட்ச், செளராஷ்டிரா கடலோரப் பகுதியில் பலத்த காற்று, மழையுடன் ஜாக்கௌ துறைமுகம் அருகே வியாழக்கிழமை மாலை பிபர்ஜாய் புயல் கரையைக் கடந்தது.

கடந்த 10 நாள்களுக்கும் மேலாக வடக்கு அரபிக் கடலில் மையம்கொண்டிருந்த அதிதீவிர பிபர்ஜாய் புயல் வியாழக்கிழமை மாலை மணிக்கு 6.30 மணிக்கு கரையைக் கடக்கத் தொடங்கியது. குஜராத் கடற்கரையில் மணிக்கு 50கி.மீ. முதல் 60கி.மீ. வேகத்தில் காற்று வீசத் தொடங்கி படிப்படியாக அதிகரித்தது.

வியாழக்கிழமை நள்ளிரவு வரையில் பிபர்ஜாய் புயல் ஜாக்கௌ துறைமுகப் பகுதியில் கரையைக் கடந்தது. துவாரகா, ஓக்கா, நாலியா, புஜ், போர்பந்தர், கண்ட்லா, மாண்ட்வி ஆகிய பகுதிகளில் பலத்த மழை பெய்தது.

பிபர்ஜாய் புயலால் மணிக்கு 125கி.மீ. முதல் 150 கி.மீ. வேகத்தில் காற்று வீசக் கூடும் என வானிலை ஆய்வு மையம் எச்சரித்திருந்தது. கட்ச் மாவட்டத்தில் பலத்த காற்றும், மழையால் பல இடங்களில் மரங்கள் வேரோடு சாய்ந்தன. மின்சாரக் கம்பங்களும் பல இடங்களில் விழுந்தன.

ஜாக்கௌ, மாண்ட்வி நகரங்களில் கொட்டகையின் மேற்கூரைகள் பலத்த காற்றில் பறந்தன.

'புயலால் ஏற்பட்ட சேதம் குறித்த தகவல்கள் முழுமையாக தெரியவில்லை. எனினும், வியாழக்கிழமை மாலை 7 வரையில் உயிர்ச்சேதம் எதும் ஏற்படவில்லை. தேவ்பூமி துவாரகாவில் மரம் விழுந்ததில் மூன்று பேர் காயமடைந்தனர். தேசிய பேரிடர் மீட்புப் படையினர், ராணுவத்தினர், குஜராத் போலீஸார் இணைந்து புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வருகின்றனர்' என்று குஜராத் உள்துறை அமைச்சர் ஹர்ஷ் சங்கவி தெரிவித்தார்.

பிபர்ஜாய் புயலின் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கட்ச் மாவட்டத்தில் சுமார் ஒரு லட்சம் பேர் வெளியேற்றப்பட்டனர். இப்புயலின் பாதிப்பு பாகிஸ்தானின் தெற்கு சிந்து மாகாணம் வரையில் இருக்கும் என்பதால் சுமார் 82,000 பேரை அந்நாட்டு அரசு பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு சென்றது.


குஜராத், கட்ச் மாவட்டம் மாண்ட்வியில் வியாழக்கிழமை மாலை பலத்த காற்றுடன் பெய்த மழை.

## அஸ்ஸாமில் வெள்ளம்: 29,000 பேர் பாதிப்பு

குவாஹாட்டி, ஜூன் 15: அஸ்ஸாமில் கனமழையால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. மூன்று மாவட்டங்களில் சுமார் 29,000 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பாக மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் வெளியிட்ட அறிக்கையில், 'தேமாஜி, திப்ருகர், லக்கிம்பூர், பக்ஸா ஆகிய மாவட்டங்களில் இடைவிடாத மழையால் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இந்த மாவட்டங்களில் சுமார் 29,000 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

லக்கிம்பூரில் மட்டும் சுமார் 23,500 பேர் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர். அவர்களுக்காக நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாநிலம் முழுவதும் 215 ஹெக்டேரில் பயிர்கள் சேதமடைந்துள்ளன. சில இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அஸ்ஸாமில் அடுத்த 5 நாள்களுக்கு கனமழை நீடிக்கும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. வெள்ள நிலைமை மேலும் மோசமடைய வாய்ப்புள்ளதால், மீட்புப் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

# சுத்திகரிக்கப்பட்ட சமையல் எண்ணெய் மீதான இறக்குமதி வரி 5% குறைப்பு

புது தில்லி, ஜூன் 15: சுத்திகரிக்கப்பட்ட சோயாபீன் மற்றும் சூரியகாந்தி எண்ணெய்கள் மீதான இறக்குமதி வரியை 17.5 சதவீதத்திலிருந்து 12.5 சதவீதமாக மத்திய அரசு குறைத்துள்ளது.

உள்நாட்டு சந்தையில் சமையல் எண்ணெய் இருப்பை அதிகரிக்கவும் விலை உயர்வைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த வரிக் குறைப்பு செய்யப்பட்டுள்ளதாகவும், வியாழக்கிழமை முதல் இது நடைமுறைக்கு வருவதாகவும் மத்திய நிதி அமைச்சகத்தின் அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'வழக்கமாக கச்சா எண்ணெய் வடிவிலேயே சோயாபீன் மற்றும் சூரியகாந்தி சமையல் எண்ணெய்களை இந்தியா இறக்குமதி செய்யும் நிலையில், சுத்திகரிக்கப்பட்ட நிலையிலான எண்ணெய்களுக்கு மத்திய அரசு வரிக் குறைப்பை செய்துள்ளது' என்று எண்ணெய் ஆலை நிர்வாகிகள் தெரிவித்தனர்.

இந்த வரிக் குறைப்பு மூலமாக, இறக்குமதி செய்யப்படும் சுத்திகரிக்கப்பட்ட சமையல் எண்ணெய்களுக்கான வரி மதிப்புக்கூட்டு (செஸ்) வரியுடன் சேர்த்து 13.7 சதவீதமாக செலுத்த வேண்டும். அனைத்து கச்சா வடிவிலான சமையல் எண்ணெய்களுக்கும் 5.5 சதவீதமாக வரி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து இந்திய எண்ணெய் பிரித்தெடுக்கும் சங்கத்தின் (எஸ்இஏ) செயல் இயக்குநர் பி.வி.மேத்தா கூறுகையில், 'கச்சா வடிவிலான சமையல் எண்ணெய்க்கும் சுத்திகரிக்கப்பட்ட சமையல் எண்ணெய்க்குமான இறக்குமதி வரியில் சிறிய அளவிலான வித்தியாசமே உள்ளது என்றபோதும், சுத்திகரிக்கப்பட்ட சமையல் எண்ணெய் இறக்குமதி என்பது வர்த்தகர்களுக்கு வணிகரீதியில் பலனளிக்காது.

எனவே, மத்திய அரசின் இந்த வரிக் குறைப்பு உள்நாட்டு சந்தையில் தக்க விளைவை அளிக்காது.

ஆனால், சமையல் எண்ணெய் இறக்குமதியை ஊக்குவிக்காது. மேலும், வழக்கமான வானிலையே இருக்கும் என இந்திய வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளபோதும், 'எல்நினோ' தாக்கம் என்ற பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் இயற்கை சீற்றத்தை முழுமையாக புறந்தள்ளிவிட முடியாது என்பதால், காரீஃப் பருவப் பயிர்கள் பாதிக்கப்படுவதற்கும், 2023-24-ஆம் ஆண்டில் உள்நாட்டு தாவர எண்ணெய் இருப்பு குறைவதற்கும் வாய்ப்புள்ளது' என்றார்.

இந்தியா உள்நாட்டு சமையல் எண்ணெய் தேவையைப் பூர்த்தி செய்ய இறக்குமதியையே நம்பியுள்ளது. மொத்த சமையல் எண்ணெய் தேவையில் 60 சதவீதம் இறக்குமதி செய்யப்படுகிறது.

மூன்றாம் ஆண்டு நினைவு தினம்

# கல்வான் வீரர்களுக்கு ராஜ்நாத் சிங் புகழஞ்சலி

புது தில்லி, ஜூன் 15: கிழக்கு லடாக்கின் கல்வான் பள்ளத்தாக்கு பகுதியில் இந்திய-சீன வீரர்கள் இடையே கடந்த 2020-இல் நிகழ்ந்த மோதலில் வீரணமடைந்த 20 இந்திய வீரர்களுக்கு பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் வியாழக்கிழமை புகழஞ்சலி செலுத்தினார்.

கடந்த 2020, ஜூன் 15-இல் நிகழ்ந்த இச்சம்பவம், இந்திய-சீன ராணுவத்தினர் இடையே பல ஆண்டுகளுக்கு பிறகு மிகத் தீவிர ராணுவ மோதலாக அமைந்தது.

கற்கள், கம்புகள், இரும்புக் கம்பிகளால் ஒருவரையொருவர் தாக்கிக் கொண்ட இந்த மோதலில், இந்தியத் தரப்பில் 20 வீரர்கள் பலியாகினர்.

சீனத் தரப்பில் 5 ராணுவ அதிகாரிகள்-வீரர்கள் உயிரிழந்ததாக அதிகாரபூர்வமாக தெரிவிக்கப்பட்டது.

ஆனால், அந்நாட்டின் தரப்பில் அதிக எண்ணிக்கையில் உயிரிழப்புகள் நேரிட்டதாக பரவலாக நம்பப்படுகிறது.

இந்நிலையில், பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் ட்விட்டரில் வெளியிட்ட பதிவில், 'நாட்டை பாதுகாக்க கல்வான் பள்ளத்தாக்கில் உயிர்த் தியாகம் செய்த துணிச்சல்மிக்க நமது வீரர்களுக்கு இந்நாளில் அஞ்சலி செலுத்துகிறோம்.



வீரர்களின் துணிச்சல், தீரம், தியாகம் ஆகியவை வருங்கால சந்ததியினருக்குத் தொடர்ந்து ஊக்கமளிக்கும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

கல்வான் தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து, இந்திய-சீன உறவுகள் பின்னடைவைச் சந்தித்தன.

எல்லைப் பிரச்சினை குறித்து இருதரப்பு ராணுவம் மற்றும் தூதரகரீதியில் பலசுற்று பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.

இந்தப் பேச்சுவார்த்தைகளின் விளைவாக பாங்காங் ஏரியின் வடக்கு, தெற்கு கரைகள் மற்றும் கோக்ரா பகுதியில் இருந்து கடந்த 2021-இல் இருதரப்பு படைகளும் திரும்பப் பெறப்பட்டன.

பாங்காங் ஏரி பகுதியில் கடந்த ஆண்டு பிப்ரவரியிலும், பேட்ரோலிங் பாயின்ட் 17 (ஏ) பகுதியில் கடந்த ஆண்டு ஆகஸ்டிலும் படைகள் விலக்கப்பட்டன.

இருதரப்பு ராணுவம் சார்பில் இதுவரை 18 சுற்று பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுள்ளன.

கடைசியாக நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது, கிழக்கு லடாக்கில் நிலுவையில் உள்ள பிரச்சினைகளுக்கு இருதரப்பும் ஏற்கும் தீர்வை விரைந்து எட்ட முடிவு செய்யப்பட்டது.

எல்லையில் அமைதியை ஏற்படுத்தாமல், சீனாவுடன் இயல்பான உறவுக்கு வாய்ப்பில்லை என்ற நிலைப்பாட்டில் இந்தியா உறுதியாக உள்ளது.

## மோடி அரசே பொறுப்பு: காங்கிரஸ் குற்றச்சாட்டு

கல்வான் பள்ளத்தாக்கில் உயிர்நீத்த இந்திய வீரர்களுக்கு காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, முன்னாள் எம்.பி. ராகுல் காந்தி ஆகியோர் அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

இதுதொடர்பாக ட்விட்டரில் கார்கே வெளியிட்ட பதிவில், 'இந்தியா-சீனா எல்லையில் வழக்கமான நிலை பராமரிக்கப்படாததற்கு பிரதமர் மோடி அரசே பொறுப்பு. எல்லையில் 65 ரோந்து சாவடிகளில் 26-ஐ இந்தியா இழந்துவிட்டது. இந்த உண்மை மக்களுக்கு தெரியக் கூடாது என்று மோடி அரசு விரும்புகிறது.



கல்வான் விவகாரத்தில், சீனாவுக்கு மோடி நற்சான்று அளிக்கிறார்.

இது, சீனா தனது மோசமான நோக்கங்களை எட்டுவதற்கு காரணமாகிறது. மேலும், தேச பாதுகாப்பு மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு மீது விழுந்த அடியாக இது உள்ளது' என்று குற்றம்சாட்டியுள்ளார்.